1982 மார்ச் 25]

திரு. பெ. திருமாறன் : தலைவர் அவர்களே, அரசு இந்த ஜெனரேட்டர் வைக்க வேண்டுமென்று ஆணையிட்டும் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. சாதாரண காரியமாக கருதாமல் இதனுடைய மூக்கியத்துவத்தை உணர்ந்து அரசு விரைவாக ஜெனரேட்டர் வாங்குவதற்கும், அதற்கான கட்டிடம் கட்டி முடிக்கவும் துரித நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள உத்தரவிடுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையை பொறுத்தவரையில் நானே நேரிடையாகச் சென்று பார்வையிட்டேன். உடனடியாக இந்த ஜெனரேட்டரை பொருத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று செயலாளர் அவர்களிடம் சொல்லி இருக்கிறேன். விரைவிலே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, அந்த ஜெனரேட்டர் இயங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்
சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் பேரவைக்கு அளிப்பார்.

திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை சட்ட விதிகள் ஆய்வுக்குழு இரண்டாவது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) ஆளுநரிடமிருந்து வரப்பெற்ற செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1981–82 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I, Sadiq Ali, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further Grants for the year 1981-82"

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS